**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SC.No. 183/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.1 / P.W.1 | District | | புதுக்கோட்டை |
| Name | : | சுரேஷ் | Calling | : | முதல் நிலைக் காவலர் |
| Father Name | : | ராமன் | Age | : | 34 |
| Village | : | கொன்னையன்பட்டி | | : | |

Solemnly affirmed by Tr.A.Dineshkumar, Translator of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 26.02.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- dated.21.02.2025 the identity of the witness verified with their identity card. Official ID card of the Witness verified.**

**எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2024ம் தேதி நானும், காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் குருசந்திரன் மூவரும் மாலை 16.00 மணியில் ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தோம். 16.30 மணியளவில் பிச்சித்தான்பட்டி ரவுன்டானா அருகே பூங்கா நகர் பாஸ்கர் வீச்சு அரிவாளுடன் நின்று கொண்டிருந்தார். அங்கு வருபவர்களிடம் தகராறில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவரை 16.45 மணிக்கு உதவி ஆய்வாளர் பிரபாகரன் அவர்கள் பூங்காநகர் பாஸ்கரை கைது செய்வதற்கு உதவியாக இருந்தோம். பின்பு 17.00 மணியளவில் அவரிடமிருந்து அரிவாளை கைப்பற்றி அவரை நிலையம் அழைத்துச்செல்ல உதவியாக இருந்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது

சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1** ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்ட அரிவாள் எதிரியிடமிருந்து சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட அரிவாள் ஆகும். அந்த **அரிவாள் சா.பொ.1** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்கு செல்லும்போது காவல் நிலைய நாட்குறிப்பில் எழுதிவிட்டு செல்ல வேண்டும் என்றால் அதிகாரி எழுதுவார் , நாங்கள் துணையாக தான் சென்றோம். 13.07.2024 ம் தேதி எந்தெந்த இடத்திற்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்று முதல் விசாரணை மற்றும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. யார் யார் ரோந்து பணிக்கு சென்றோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . எந்த வாகனத்தில் சென்றோம் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பிச்சித்தான்பட்டி ரவுன்டானா என்பது நான்கு ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான் . சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல , பிச்சித்தான்பட்டி ரவுன்டானா என்று சொல்லியிருக்கிறேன் . பிச்சித்தான்பட்டி ரவுன்டான ஆட்கள் நிறைய இருக்கக்கூடிய இடம் என்றால் சரிதான் . நாங்கள் செல்லும் போது அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 10–15 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த 10–15 நபர்கள் யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களை பார்த்தவுடன் எதிரி பாஸ்கர் எந்த திசையை பார்த்து ஓட முற்பட்டார் என்ற விவரத்தை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கு வைத்து எதிரியை கைது செய்தோம் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் கைது செய்தோம். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை

என்றும், எதிரியை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும் , சம்பவ இடத்தில் இருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மீது காவல் நிலையத்தில் வேறு வழக்கு இருப்பதால் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

***Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.***

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SC.No. 183/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.2 / P.W.2 | District | | புதுக்கோட்டை |
| Name | : | குருசந்திரன் | Calling | : | இரண்டாம் நிலைக் காவலர் |
| Father Name | : | சண்முகம் | Age | : | 34 |
| Village | : | சொக்கநாதன்பட்டி | | : | |

Solemnly affirmed by Tr.A.Dineshkumar, Translator of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 26.02.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-dated.21.02.2025 the identity of the witness verified with their identity card. Official ID card of the Witness verified.**

**எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2024ம் தேதி மாலை காவல் உதவி ஆய்வாளர் பிரபாகரன் மற்றும் முதல் நிலைக்காவலர் சுரேஷ் ஆகியோருடன் மாலை KKC ரவுன்டானா வழியாக ரோந்து சென்று கொண்டிருந்தோம். 16.00 மணிக்கு பிச்சித்தான்பட்டி ரவுன்டானா அருகில் பொதுமக்கள் அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். என்னவென்று பார்த்தபோது கையில் ஒருவர் அரிவாளை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். 16.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் கையில் அரிவாள் வைத்திருந்த நபரை விசாரித்தார் . அவர் தனது பெயர் பூங்காநகர் பாஸ்கர் என்று சொன்னார் . அரிவாள் வைத்திருந்ததற்கான காரணம் எதுவும் சொல்லவில்லை. பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் அ .சா.1 மற்றும் என் முன்னிலையில் அந்த நபரை கைது செய்தார் . 17.00 மணிக்கு அவர் கையில் வைத்திருந்த அரிவாளை எங்கள் முன்னிலையில் அவர் ஆஜர்படுத்தினார்.

தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் . அந்த கைப்பற்றுதல் மகஜர் அ .சா.ஆ.1 தான். தற்போது என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்ட அரிவாள் எதிரியிடமிருந்து சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்ட அரிவாள் ஆகும் . அந்த அரிவாள் சா.பொ.1 தான். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்கு செல்லுமபோது நாட்குறிப்பில் எழுத வேண்டும் என்றால் சரிதான். யார் யார் எந்த வாகனத்தில் சென்றோம் என்று முதல் விசாரணையிலும் , வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான் . ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் காவல் நிலைய ரோந்து வாகனத்தில் சென்றோம் . அது நான்கு சக்கர வாகனமா என்றால் இல்லை , இருசக்கர வாகனம் ஆகும் . எந்த வாகனத்தில் ரோந்து சென்றோம் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் முன்வரவில்லை . பிச்சித்தான்பட்டி ரவுன்டானா அருகே சென்றபோது சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சுமார் 15 நபர்கள் இருந்திருப்பார்கள் . அந்த நபர்களிடம் விசாரணை செய்தோமா என்றால் விசாரித்தார் . பொதுமக்களின் பெயர் முகவரி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிச்சித்தான்பட்டிக்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் 2–1–2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் . காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் சுமார் 45 நிமிடம் ஆகும் . எதிரி சண்டை போட்டதாக சொல்லும் சம்பவத்தை பொறுத்த CCTV பதிவுகள் எடுத்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும் . நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் , எதிரியை கைது செய்யவில்லை என்றும் , எதிரியிடமிருந்து எந்த சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், அதில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . கைப்பற்றுதல் மகஜரில் நான் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால்

பிச்சித்தான்பட்டி ரவுன்டானாவில் வைத்து கையொப்பம் செய்தேன் . நான் சொல்வது தவறு என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

***Taken down by me in open court read over to the witnesses and admitted by him/her to be correct.***

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SC.No. 183/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | L.W.3 / P.W.3 | District | | திருச்சி |
| Name | : | பிரபாகரன் | Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |
| Father Name | : | மருதமுத்து | Age | : | 34 |
| Village | : | திருச்சி | | : | |

Solemnly affirmed by Tr.A.Dineshkumar, Translator of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 26.02.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1- dated.21.02.2025 the identity of the witness verified with their identity card. Official ID card of the Witness verified.**

**எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்ட தனிப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.07.2024 ம் தேதி நான் புதுக்கோட்டை டவுன் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று மாலை சுமார் 16.00 மணிக்கு என்னுடன் பணியில் இருந்த முதல் நிலைக்காவலர் சுரேஷ் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் குருசந்திரன் ஆகியோருடன் மாலை ரோந்திற்காக புதுக்கோட்டை Old GH, புதுக்கோட்டை பேருந்து நிலையம் , KKC ரவுன்டானா, பிச்சித்தான்பட்டி ரவுன்டானா ஆகிய இடங்களுக்கு ரோந்திற்காக சென்றபோது பிச்சித்தான்பட்டி ரவுன்டான அருகே மாலை சுமார் 16.30 மணியளவில் ஒரு நபர் பெரிய அரிவாளுடன் பொது மக்களுக்குஅச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இருந்தவரை விசாரணை செய்தபோது , அவரது பெயர் பாஸ்கர் என்கிற பூங்கா நகர் பாஸ்கர் என்று கூறி அவரது முகவரியை கூறினார் . பின்பு அவர்கையில் வைத்திருந்த பெரிய இரும்பு அரிவாளுக்கான காரணத்தை கேட்டபோது

முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறினார் . பின்னர் அவர் எவ்வித முகாந்திரமும் இன்றி கையில் வைத்திருந்த பெரிய இரும்பு அரிவாளுக்கான காரணம் கூறாததால் அவரை குற்றக்காரணம் கூறி 16.45 மணிக்கு கைது செய்தும் , பின்னர் 17.00 மணி முதல் அவர் கையில் வைத்திருந்த இரும்பு அரிவாளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜருக்கு சாட்சியாக இருக்க யாரும் முன்வராததால என்னுடன் பணியில் இருந்த காவலர்களை சாட்சிகளாக கொண்டு மேற்படி எதிரியிடமிருந்து அரிவாளை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன் . பின்னர் எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து , 18.00 மணிக்கு புதுக்கோட்டை நகர காவல் நிலைய கு.எண்.186/2024 ச.பி.25(1)(A) of Arms Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் . நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையையும், வழக்கு கோப்பினையும் காவல் ஆய்வாளரின் மேல் புலன் விசாரணைக்காக சமர்பித்தேன். நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் அ .சா.ஆ.1 தான். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** ஆகும். சம்பவத்தின்போது எதிரியிடமிருந்து கைப்பற்றிய அரிவாள் சா .பொ.1 தான். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்து பணிக்கு செல்லும்போது காவல் நிலைய நாட்குறிப்பில் எழுதி வைத்துவிட்டு செல்ல வேண்டும் என்றால் சரிதான் . எந்தெந்த பகுதிக்கு ரோந்து செல்கிறோம் என்று நாட்குறிப்பில் எழுதிச்செல்ல வேண்டும் என்றால் சரிதான் . அந்த நாட்குறிப்பை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் . இந்த விவரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . காவல் ஆய்வாளர் விசாரணையில் புதுக்கோட்டை Old GH, புதுக்கோட்டை பேருந்து நிலையம், KKC ரவுன்டானா, பிச்சித்தான்பட்டி ரவுன்டானா ஆகிய இடங்களுக்கு ரோந்திற்காக சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . பிச்சித்தான்பட்டி ரவுன்டான அருகே சென்றபோது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 15 நபர்கள் இருந்தார்கள். அந்த 15 நபர்கள் யாரும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . நான் அழைத்து விசாரித்த

நபர்களின் பெயர் , முகவரியும் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . பிச்சித்தான்பட்டி ரவுன்டானாவில் எதிரி எங்களை பார்த்து ஓடியதாக சொல்லியுள்ள நிலையில், எந்த திசையை நோக்கி ஓடினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான் . பிச்சித்தான்பட்டி ரவுன்டான நான்கு சாலைகள் சந்திக்கக்கூடிய இடம் என்றால் சரிதான் . அந்த இடத்தில் கடைகள், வீடுகள் நிறைய உள்ளது என்றால் சரிதான் . அந்த இடத்தில் உள்ள கடைக்காரர்களையோ, வீடுகளில் உள்ளவர்களையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் யாரும் சாட்சியம் அளிக்க வரவில்லை. புதுக்கோட்டை நகர காவல் நிலையத்திற்கு எதிரே அரிவாள் விற்பனை செய்யும் கடை உள்ளது என்றால் அரிவாள் செய்யும் கடை இல்லை, விற்பனை செய்யும் கடைகள் உள்ளது. எதிரியை கைது செய்தது குறித்து ஆய்வாளருக்கு தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், சொன்ன நாள், நேரம் இடம், விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் , எதிரியிடமிருந்து எந்தவொரு சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . அரசின் புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றும் , மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து , அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

***Taken down by me in open court***
***read over to the witnesses and***
***admitted by him/her to be correct.***

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***